ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,149 — 1960 ජූනි 24 වැනි සිකුරාදා — 24.6.1960

12,149 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு ஜூன் மாதம் 24 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV — உள்ளூர் ஆட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவிப்புகள் .. .. | 29 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | வரவு செலவுத் திட்டங்கள் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணைவிதிகள் .. .. .. | 29 | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகாரநிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — | நாணுவிதம் .. .. .. | — |


## உள்ளூராட்சி அறிவிப்புகள்

### வாதுவைக்கு ஒரு நகர சங்கம் அமைத்தல்

1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க நகர சங்கச் சட்டத்தின் தாற்பரியப் படி, களுத்துறை மாவட்டத்தில் இன்று வாதுவை பட்டணச் சங்கத்தால் பரிபாலிக்கப்படும் பிரதேசத்துக்கும், ஒரு புதிய 9 ஆம் இலக்க வட்டார மாக அமையும் 6 ஆம், 5 ஆம் இலக்க வட்டாரங்களுக்குத் தெற்கே பிரிவீனு தெருவரையும் 8 ஆம் இலக்க வட்டாரத்துக்குக் கிழக்கே மகா விஹாரைத் தெரு மத்தியிலிருந்து கிழக்கே 8 சங்கிலி வரையும் உள்ள மற்றுமோர் பிரதேசத்துக்கும் ஒரு நகர சங்கம் அமைக்க உத்தேசிக்கப் படுகின்றது.

2. உத்தேசிக்கப்படும் நகர சங்கத்தின் அமைப்பு, அதன் எல்லைகள், தேர்தற் பிரிவுகள் ஆகியவை விஷயமாக கெதியில் ஒரு தீர்க்கமான முடிவு செய்யக் கூடியதாக இவ்விஷயத்தில் சிரத்தையுள்ள எவரதும் அல்லது எத்தாபனத்தினதும் அபிப்பிராயங்களைக் கேட்டறியும்படி உள்ளூராட்சி, வீடமைப்பு அமைச்சர் என்னைப் பணித்துள்ளார்.

3. அபிப்பிராயங்கள் எதுவும் (எழுத்தில்) இந்த அறிவித்தலின் திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப் பப்படவேண்டும்.

விலாசம் :—

உள்ளூராட்சி அதிகாரி,
தபாற் பெட்டி 500,
கொழும்பு.

வி. சி. ஜயசூரியா,
பதில் உள்ளூராட்சி அதிகாரி.

உள்ளூராட்சிப் பகுதி,
கொழும்பு, ஜூன் 18, 1960.

## துணை விதிகள்

L.G.D—GC. 14/47.

### கிராம சமுதாயச் சட்டம்

கிராம சமுதாயச் சட்டத்தின் (அத்தியாயம் 198) 49 ஆம் பிரிவின்படி புத்தளம் மாவட்டத்து அக்கரைப்பற்றுக் கிராமப் பகுதியின் கிராமச் சங்கத்தால் ஆக்கப்பட்டு, 1947 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதி வெளியான 9,773 ஆம் இலக்க விசேஷ வர்த்தமானியில் பிரசுரமான பிரகடனத்தால் திருத்தப்பட்ட அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவு தம்மீது வைத்த தத்துவங்களின் பலத்தைக்கொண்டு, உள்ளூ ராட்சி, வீடமைப்பு அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட உபவிதி.

V. C. ஜயசூரியா,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி வீடமைப்பு அமைச்சு.

கொழும்பு, 14.6.1960.

### உபவிதி

#### தீங்கான, அபாயமான வியாபாரங்கள்

1. (1) கீழ்க்காணும் வியாபாரங்கள் தீங்கான வியாபாரங்களாகக் கருதப்படும் :—

(அ) பாகம்பண்ணிய மீன் அல்லது கருவாடு சேகரித்து வைத்தல்.
(ஆ) மொத்த வியாபாரத்தின்பொருட்டு கெடக்கூடிய உணவுப்பொருட் களை சேகரித்து வைத்தல்.
(இ) செயற்கை உரம் செய்தல்.
(ஈ) சவர்க்காரம் செய்தல்.
(உ) சுருட்டுச் சுற்றுதல்.
(ஊ) பலகை பக்குவம் செய்தல்.
(எ) தும்பு செய்தல் அல்லது சேகரித்து வைத்தல்.
(ஏ) மூன்று மூடைகளுக்கு அதிகமாக தோல், எலும்பு அல்லது செயற்கை உரம் சேகரித்து வைத்தல்.
(ஐ) புகையிலை சேகரித்து வைத்தல்.
(ஒ) கருவாடு பாகம்பண்ணல்.
(ஓ) மீனுக்கு "ஐஸ்" போடுதல்.

(2) கீழ்க்காணும் வியாபாரங்கள் அபாயமான வியாபாரங்களாகக் கருதப்படும் :—

(அ) குழிவெட்டி முதிரைக்கல் தோண்டுதல்.
(ஆ) வைக்கோல் சேகரித்து வைத்தல்.
(இ) கடற்சிப்பி சேகரித்து வைத்தல்.
(ஈ) புகையிலை பாடம்பண்ணலும் உலர்த்தலும்.
(உ) மண்ணெண்ணெய்க்கடை வைத்தல்.
(ஊ) ஆபரணங்கள் செய்தல்.
(எ) எண்ணெய் அல்லது வேறு எரிபொருள் அல்லது நீராவி அல்லது மின்சக்தி கொண்டியங்கும் இயந்திரம் பாவிக்கப்படும் வியா பாரம் எதுவும்.
(ஏ) கொப்பரா செய்தல்.
(ஐ) கொப்பரா சேகரித்து வைத்தல்.
(ஒ) "கபூக்" கல், மக்கிக்கல் அல்லது கருங்கல் தோண்டுதல்.
(ஓ) சுண்ணும்பு சுடுதல்.
(ஔ) மூன்று மூடைகளுக்கு அதிகமாக சுண்ணும்பு சேகரித்து வைத் தல்.
(க) பைசிக்கிள் செப்பனிடும் தொழிற்களரி வைத்தல்.
(கா) கொற்றொழில் செய்தல்.
(கி) தச்சுத் தொழிற்களரி வைத்தல்.

(3) கீழ்க்காணும் வியாபாரங்கள் தீங்கான, அபாயமான வியாபாரங் களாகக் கருதப்படும் :—

(அ) மின்குளங்களில் மின்சக்தி நிரப்புதல்.
(ஆ) சோடா காய்ச்சுதல்.
(இ) செங்கற்கள் அல்லது ஓடுகள் சுடுதல்.
(ஈ) கரிக்காக தேங்காய்ச் சிரட்டை கருக்குதல்.